2006 செப்டம்பர் 1]

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதால், அங்கு இயங்கிக்கொண்டிருக்கும், Judicial Magistrate-I, Judicial Magistrate-II, இவற்றில் Judicial Magistrate-I அல்லது II–ல் உள்ள Judicial Magistrate–ஐ, ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு மாற்றம், அதாவது, shift செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அவ்வாறு மாற்றம் செய்யும் எண்ணம் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

133—

தங்கும் விடுதி

***930—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருதல் குறித்துத் தற்போது சுற்றுலாத் துறையில் திட்டம் எதுவுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கொடுமுடி என்பது, மும்மூர்த்திகள் இருக்கிற திருத்தலம். அதுவும், சேலம் மற்றும் தருமபுரி

மாவட்டங்களிலேயிருந்து, அங்கே வந்து, காவிரி ஆற்றிலேயிருந்து தீர்த்தத்தை எடுத்து பழனிக்குச் செல்கிற பக்தர்கள் அதிகம். மிகப் பெரிய அளவிலே அங்கே பக்த கோடிகளும், பொது மக்களும், சுற்றுலாப் பயணிகளும் தரிசனத்திற்கு வருகின்ற அந்தத் தலத்தை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் கேட்டிருப்பதால், அங்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக இருந்தால், நிச்சயமாக அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 134 மற்றும் 135, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

136—

கம்பிவடப் பாதை

***692—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குக் கம்பிவடப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நடந்து செல்ல படிவழிப் பாதைகள் ஏற்கெனவே இரண்டு இருக்கின்றன. அவை தவிர, வாகனங்கள் சென்று வர மலைவழிச் சாலை ஒன்றும் உள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்குப் பக்தர்கள் சென்று திரும்புவதற்குக் கூடுதலாக கம்பிவடப் பாதை அமைக்க அவசியம் இல்லை என்று இத்துறை கருதுகிறது.

TRUTH ALONE TRIUMPHS